




admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com


காலை நாளிதழ்








| Vol: 02 | Issue: 364 | 4 Pages | 30.7.2025 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| லர்: 02 | இதழ்: 364 | 4 பக்கங்கள் | 30.7.2025 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |





**பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்**

**பற்றுக பற்று விடற்கு**

**விளக்கம்:** பற்றில்லாதவனாகிய கடவுளுடைய பற்றை மட்டும் பற்றிக் கொள்ள வேண்டும், உள்ள பற்றுக்களை விட்டொழிப்பதற்கே அப் பற்றைப் பற்ற வேண்டும்.

## தாய்லாந்துகம்போடியா போர்நிறுத்தம்: "சமாதானத்தின் தலைவராக இருப்பதில் பெருமைப்படுகிறேன்" டிரம்ப்



வாஷிங்டன், ஜூலை 30

தாய்லாந்துகம்போடியா இடையே நிலவும் நீண்ட கால எல்லை பிரச்சினை தற்போது மோதலாக வெடித்தது. இதனால் இரு நாடுகளின் வீரர்களும் எல்லையில் தாக்குதல் நடத்தினர். இந்த மோதலில் இதுவரை இரு தரப்பிலும் 33 பேர் பலியாகி உள்ளனர். எனவே எல்லை மாகாணங்களான தாய்லாந்தின் சுரின் மற்றும் கம்போடியாவின் ஒடன் மின்ச்சியில் இருந்து சுமார் 1 லட்சத்து 70 ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டனர்.

அதன்பிறகு இரு நாடுகளின் தலைவர்களிடமும் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் தனித்தனியாக பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது மோதலை தொடர்ந்தால் அமெரிக்கா உடனான வர்த்தக ஒப்பந்தம் பாதிக்கப்படும் என அவர்களிடம் டிரம்ப் கூறினார். இதனால் அவர்கள் இருவரும் பேச்சுவார்த்தை நடத்த ஒப்புக்கொண்டனர்.

இதனையடுத்து மலேசியாவின் புட்ரஜயா நகரில் பிரதமர் அன்வர் இப்ராகிம் தலைமையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதில் கம்போடிய பிரதமர் ஹன் மானெட்டும், தாய்லாந்தின் தற்காலிக பிரதமர் பும்தம் வெச்சாயாச்சாவும் கலந்து கொண்டு பேசினர். இதன் முடிவில் எவ்வித நிபந்தனையுமின்றி மோதலை முடிவுக்குக் கொண்டு வர அவர்கள் ஒப்புக்கொண்டதாக மலேசியா பிரதமர் அன்வர் இப்ராகிம் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் கம்போடியாதாய்லாந்து போர் நிறுத்தத்திற்கான தனது ஈடுபாடு குறித்து அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது ட்ரூத் சோசியலில் பதிவிட்டுள்ள அவர், "தாய்லாந்தின் தற்காலிக பிரதமர் மற்றும் கம்போடியாவின் பிரதமரிடம் இப்போதுதான்பேசினேன். ஜனாதிபதி டொனால்டு டிரம்பின் ஈடுபாட்டிற்குப் பிறகு, இரு நாடுகளும் ஒரு போர் நிறுத்தம் மற்றும் அமைதியை எட்டியுள்ளன என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். அனைவருக்கும் வாழ்த்துக்கள்!

இந்த போரை முடிவுக்குக் கொண்டுவந்ததன் மூலம், ஆயிரக்கணக்கான உயிர்களைக் காப்பாற்றி உள்ளோம். வர்த்தகம் தொடர்பான பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்குமாறு எனது வர்த்தகக் குழுவிற்கு நான் அறிவுறுத்தி உள்ளேன். இப்போது ஆறு மாதங்களில் பல போர்களை முடித்துவிட்டேன் அமைதியின் தலைவராக இருப்பதில் பெருமைப்படுகிறேன்" என்று அதில் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

இதனிடையே அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப், ஸ்காட்லாந்தில் உள்ள தனது இல்லத்துக்கு சென்றார். அங்கு அவரை இங்கிலாந்து பிரதமர் கெய்ர்ஸ்டார்மர், தன்னுடைய மனைவி விக்டோரியாவுடன் சென்று சந்தித்தார். அப்போது, இஸ்ரேல் தாக்குதல் நீடித்து வருவதால், காசாவில் நிலவும் உணவு தட்டுப்பாட்டை போக்க அமெரிக்கா முக்கிய பங்காற்ற வேண்டும் என்று கெய்ர் ஸ்டார்மர் கேட்டுக்கொண்டார். இருவரும் சேர்ந்து நிருபர்களுக்கு பேட்டி அளித்தனர். அப்போது, இந்தியாபாகிஸ்தான் சண்டை உள்பட 6 பெரிய போர்களை, தான் நிறுத்தி இருப்பதாக டிரம்ப் கூறினார். தான் தலையிடாவிட்டால், இந்தியாவும், பாகிஸ்தானும் சண்டையிட்டு கொண்டுதான் இருக்கும் என்று அவர் மீண்டும் கூறினார்.

## உடலுக்கு புத்துணர்ச்சியூட்டுகிறது சார்ஜாவில் மணல் குளியல்



சார்ஜா, ஜூலை 30

மணல் குளியல் என்பது உடலை மணலில் புதைத்து சிகிச்சைபெறும்ஒருபழமையான இயற்கை சிகிச்சை முறையாகும். இது ஆங்கிலத்தில் 'சேண்ட் பாத்' என்று அழைக்கப்படுகிறது. இதில் உடலை சூடான மணலில் புதைத்து அதன் வெப்பம் மூலம் உடலின் பல்வேறு நோய்களை நிவர்த்தி செய்யலாம் என்ற நம்பிக்கை உள்ளது. பழங்காலம் முதலே இதுபோன்ற இயற்கை சிகிச்சை முறை நடைமுறையில் உள்ளது குறிப்பிடத்தக்கது. இந்தியா, மொராக்கோ, ஜப்பான் போன்ற நாடுகளில் மரபு சிகிச்சையாக பயன்படுத்தப்படும் இந்த மணல் குளியல் தற்போது அமீரகத்தில் சார்ஜா கடற்கரைகளில் பிரபலமடைந்து வருகிறது. சார்ஜா கடற்கரையில் சூரிய உதயத்திற்கு முன், விடியற்காலை நேரத்தில் குழுவாக இந்த மணல் குளியலை பலரும் மேற்கொள்கின்றனர். முதலில் ஆழமற்ற குழிகள் கடற்கரை மணலில் தோண்டப்படுகிறது. பிறகு நண்பர்கள் உதவியுடன் அந்த குழியில் படுத்து பிறகு மணலால் உடல் கழுத்து வரை மூடப்படுகிறது. அதிகாலை 5.30 மணி முதல் 6.30 மணி வரை ஈரமான மணலில் சுமார் 25 நிமிடங்கள் புதைந்திருக்கின்றனர். இதில் கோவாவில் இருந்து வந்துள்ள குழுவினர் மணல் குளியல் உடலுக்கு புத்துணர்ச்சி அளிப்பதாக தெரிவித்துள்ளனர். பிரபலமடைந்து வரும் மணல் குளியல் குறித்து அமீரகத்தில் பணியாற்றும் டாக்டர்கள் அளித்துள்ள விளக்கத்தில் கூறியிருப்பதாவது: ரத்த சுழற்சி மேம்படுவது, தசைபிடிப்பில் இருந்து நிவாரணம், சருமத்திற்கான நன்மைகள் இதில் கிடைப்பது உண்மை என்றாலும் அமீரகத்தில் நிலவும் உச்சகட்டமான கோடை காலத்தில் அதிகமான வெப்பம் ஆபத்துகளை ஏற்படுத்தக்கூடும். உடலில் நீரிழப்பு மற்றும் வெப்ப வாதம் போன்றவைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே மணல் குளியலுக்கான நேரத்தை நிர்ணயிக்க வேண்டும். மேலும் இதில் பங்கேற்பவர்கள் தண்ணீர் அதிகமாக குடிக்க வேண்டும். புதைந்திருக்கும் மணல் சுத்தமாக இருக்க வேண்டும். மாசுபாடுடைய மணல் பகுதிகள் பாக்டீரியா மற்றும் ஒவ்வாமையை ஏற்படுத்தும் தன்மையை கொண்டு இருக்கலாம். எனவே குழந்தைகள், முதியவர்கள் இதில் மிக கவனமாக பங்கேற்க வேண்டும். நாள்பட்ட சுவாசக்கோளாறு மற்றும் தோல் நோய் பிரச்சினை உடையவர்கள் ஒரு மருத்துவ நிபுணரை முன்கூட்டியே சந்தித்து ஆலோசனை பெறுவது நல்லது. இவ்வாறு அதில் கூறியுள்ளனர்.

# தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை தேவை: ஜெய்சங்கருக்கு மு.க.ஸ்டாலின் கடிதம்



சென்னை, ஜூலை 30

இலங்கைகடற்படையால்சிறை பிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் 14 பேரை விடுவிக்க நடவடிக்கை எடுக்கக்கோரி மத்திய வெளியுறவு மந்திரி ஜெய்சங்கருக்கு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். அந்த கடிதத்தில் அவர் கூறி இருப்பதாவது;

"இன்று (29072025) காலை இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஐந்து மீனவர்கள் இயந்திரமயமாக்கப்பட்ட தங்களது மீன்பிடிப் படகுடன் சிறை பிடிக்கப்பட்டிரு ப்பதையும், மற்றொரு சம்பவத்தில் ஒன்பது மீனவர்கள் மோட்டார் பொருத்தப்பட்ட தங்களது நாட்டுப்படகுடன் இலங்கைக் கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ளனர். இந்த மாதத்தில் மட்டும் இது நான்காவது சம்பவமாகும். இந்தத் தொடர்ச்சியான கைது நடவடிக்கைகள், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு பெருத்த மனரீதியான மற்றும் பொருளாதார நெருக்கடியையும், வாழ்வில் நிச்சயமற்ற தன்மையையும் ஏற்படுத்தியுள்ளது. தற்போது, 235 மீன்பிடிப் படகுகளும், 68 மீனவர்களும் இலங்கை காவலில் உள்ளனர்.

நிலைமையின் தீவிரத்தைக் கருத்தில் கொண்டு, இலங்கை அதிகாரிகளின் பிடியில் உள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவில் விடுவித்திட உரிய தூதரக நடவடிக்கைகளை வெளியுறவு மந்திரி மேற்கொள்ள வேண்டும்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போலி பத்திரிகை சம்பந்தமாக ஆணையர் அலுவலகத்தில் நம்முடைய சங்க மூலமாக புகார் மனு



போலி பத்திரிகை சம்பந்தமாக ஆணையர் அலுவலகத்தில் சனிக்கிழமை நம்முடைய சங்க மூலமாக புகார் மனு கொடுத்துள்ளோம் அதற்காக அனுப்பர்பாளையம் காவல் நிலையத்திலிருந்து ஏட்டையா அவர்கள் அலைபேசியில் அழைத்தார்கள் அதனால் இன்று (29/07/2025)காலை10.மணிக்கு ஊடகக் கனி நல சங்கம் மற்றும் லட்சிய தமிழர் முன்னேற்ற சங்கம் ஆகிய இரு சங்கத்திலிருந்தும் பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் என பல பத்திரிக்கையாளர்கள் கலந்து கொண்டு காவல் நிலையத்தில் சென்று ஆதாரங்களை புகாருக்கான காவல் நிலையத்தில் சமர்ப்பித்த பின்னர் அவர்கள் எதிர் தரப்பினராகிய போலி பத்திரிகையாளரை அலைபேசி மூலமாக ஏட்டையா அவர்கள் பலமுறை தொடர்பு கொண்டார்கள் அவர்கள் எடுக்கவில்லை எனவே அவர் மீது நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொல்லி எங்களை கலைந்து செல்லுங்கள் என்று சொன்னார்கள் போலிகள் உள்ளவரை அதற்காக குரல் கொடுப்பது நம்முடைய கடமையாக இருக்கட்டும்

# விமான நிலையத்தில் டிஜி யாத்ரா சேவை; பயணிகளிடம் வரவேற்பு




கோவை

டிஜி யாத்ராவிற்கு கோவை சர்வதேசவிமானநிலையத்தில், பயணிகளிடமிருந்து அதிக ஆதரவு கிடைத்துள்ளது. விமான நிலையங்களில் பயணிகளின் காத்திருப்பு நேரத்தை குறைக்கவும், விரைந்து சேவை வழங்கவும், பாதுகாப்பு அம்சங்களை மேம்படுத்தவும், விமானப் போக்குவரத்து அமைச்சகம் 'டிஜி யாத்ரா' சேவையை துவங்கியது.

டிஜி யாத்ரா செயலி மூலம் பயணிகளின் செக் இன், பாதுகாப்பு மற்றும் போர்டிங் ஆகிய பல்வேறு சோதனைச் சாவடிகளில் பயணிகளின் அடையாளங்களைச் சரிபார்க்க முக அங்கீகாரத்தைப் பயன்படுத்தப்படுகிறது. கோயம்புத்தூர் விமான நிலையத்தில் 20 சதவீத பயணிகள் இந்த தடையற்ற, காகிதமில்லா சேவையை பயன்படுத்துவதாக, இந்திய விமான நிலைய ஆணையம் தெரிவித்துள்ளது.


இது சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் நிர்ணயித்த 10 சதவீத இலக்கை விட இது அதிகம். இதன் பயன்பாட்டை அதிகரிக்க பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. தற்போது, கோவை விமான நிலையத்தில் டிஜி யாத்ராவிற்காக மூன்று செக்இன் இநுழைவாயில்கள் உள்ளன. முனையத்திற்குள் நுழைந்த பின், பாதுகாப்பு சோதனைக்கு இரண்டு மின் வாயில்களும், ஏறுவதற்கு ஒரு வாயிலும் உள்ளன.

இவ்வசதியைப் பயன்படுத்த, பயணிகள் தங்கள் ஸ்மார்ட்போன்களில் டிஜி யாத்ரா செயலியை நிறுவ வேண்டும். தனிப்பட்ட விவரங்கள், ஆதார்போன்றஅடையாளச் சான்றுகளை வழங்கி பதிவு செய்ய வேண்டும். டிஜி யாத்ரா ஐ.டி., யை உருவாக்க ஒரு செல்பியைப் பதிவேற்ற வேண்டும். பயணத்திற்கு முன் போர்டிங் பாஸ் அல்லது இடிக்கெட்டை பயன்பாட்டில் பதிவேற்ற வேண்டும்.

கோவை விமான நிலைய அலுவலர்ஒருவர்கூறுகையில், 'எளிதில் ஆவணங்களை சோதனை செய்யப்படுவதாலும், காத்திருப்பு நேரம் குறைவதால் பயணிகளால் இது பெரிதும் விரும்பப்படுகிறது.

அனைத்து ஆவணங்களும் ஒரே நேரத்தில் சரிபார்க்கப்படுவதால், காகித ஆவணங்களை கையில் வைத்திருக்கத் தேவையில்லை. இச்சேவையை பயன்படுத்துவோரின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது' என்றார்.

# கோவை எய்ம்ஸ் நிறுவனத்தில் வேலை



குரூப் A, B மற்றும் C பதவிகளில் உள்ள 3,496 பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பை எய்ம்ஸ் வெளியிட்டுள்ளது.


10thபடித்தவர்களுக்குAIIMஇல் வேலை... 3,496 காலிப்பணியிடங்கள்... உடனே அப்ளை பண்ணுங்க...

அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனத்தில் (AIIMS) 2025ஆம் ஆண்டுக்கான பொது ஆட்சேர்ப்புத் தேர்வு (CRE) மூலம் வேலைவாய்ப்புகள் அறிவிப்பு. குரூப் A, B மற்றும் C பதவிகளுக்கு 3,496 பணியிடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

காலிப்பணியிடங்கள்: UDC, MTS, PA, JE, AE, Stenographer, Senior Nursing Officer/Staff Nurse Posts என இந்த பணிகளுக்கு மொத்தமாக 3,496 காலி பணியிடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வித் தகுதி: இந்த பணிகளுக்கு விண்ணப்பிக்கும் நபர்கள் 10th, 12th, ITI, Diploma, B.E/B.Tech, B.Sc, B.Com, Any Degree என பணிகளுக்குத் தக்க படிப்பு முடித்திருக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த பணிகளுக்கு விண்ணப்பிக்க அதிகாரப்பூர்வ இணையதளமான aiimsexams.ac.in. என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரர்கள் 18 வயது முதல் 30 வயதுக்குள் இருக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த பணிக்கு விண்ணப்பிக்க விருப்பமுள்ள நபர்கள் 31.07.2025 மாலை 5 மணிக்குள் விண்ணப்பிக்க வேண்டும். மேலும் இந்த பணியிடங்கள் AIIMS மங்கலகிரி, JIPMER காரைக்கால், JIPMER புதுச்சேரி, JIPMER யானம், AIIMS ஜோத்பூர் ஆகிய இடங்களில் அறிவிக்கப்பட்டுள்ளது.

# அவிநாசி ரோட்டில் சுரங்க பாதைகள் நீக்கம்; தமிழக நெடுஞ்சாலை துறைக்கு நோட்டீஸ்

கோவை

கோவை அவிநாசி ரோட்டில், உப்பிலிபாளையம் முதல் கோல்டுவின்ஸ் வரை 10 கி.மீ., துாரத்துக்கு மாநில நெடுஞ்சாலைத்துறை மேம்பாலம் கட்டுகிறது. திட்டத்தின் மதிப்பீடு ரூ.1,621 கோடி. இதில், ரூ.15 கோடியில் ஐந்து இடங்களில் சுரங்க நடைபாதை அமைப்பதாக இருந்தது. திட்ட மதிப்பு 1791 கோடியாக உயர்த்தப்பட்டது. ஆனால், சுரங்க பாதைகள் மற்றும் சர்வீஸ் ரோடு அமைக்கும் திட்டம் நீக்கப்பட்டுள்ளது.

'மெட்ரோ ரயில்' திட்டத்தில் சுரங்கப்பாதைகள் அமைக்க இருப்பதால், ஒரேவேலைக்குஇரண்டு முறை செலவு செய்ய வேண்டாம் என்பதால் நீக்கியதாக, நெடுஞ்சாலை துறை சொல்கிறது.

'மெட்ரோ' திட்டத்துக்கு ஒப்புதல் கேட்டு, மத்திய அரசுக்கு இப்போது தான் திட்ட அறிக்கை அனுப்பி உள்ளனர். மத்திய அரசு அதற்கான நிதி ஒதுக்கி, டெண்டர் விட்டு, வேலை தொடங்கி, சுரங்க பாதை அமைக்க எத்தனை ஆண்டுகள் ஆகும் என்றே



தெரியாது.

அதுவரை அவிநாசி ரோடை பயன்படுத்துவோர் கதி என்ன? மேம்பாலத்தின் கீழே ஏராளமான பஸ் ஸ்டாப்புகள் உள்ளன. மக்கள் ஒரு பக்கம் இருந்து மறுபக்கம் செல்வது எப்படி? போக்குவரத்து மிகுந்த இந்த ரோடை கடப்பது திடகாத்திரமான மனிதர்களுக்கே சிரமம். பெண்கள், முதியோர், குழந்தைகள் நிலை என்ன?

அதை உணர்ந்தே, தமிழக அரசு ஒப்புதல் அளித்த திட்ட அறிக்கையில் சுரங்க பாதைகளுக்கும், சர்வீஸ் ரோடுக்கும் நிதி ஒதுக்கியது. முந்தைய கலெக்டர் கிராந்திகுமார் தலைமையில் நடந்த சிறப்பு சாலை பாதுகாப்பு கூட்டத்தில், சுரங்கப் பாதை அமைக்க வாய்ப்பில்லை என்றால், எஸ்கலேட்டர் அல்லது லிப்ட் வசதியுடன் கூடிய ஒரு நடை மேம்பாலம் அமையுங்கள்; பயன்பாட்டை பார்த்து விட்டு, மற்ற இடங்களில் அமைக்கலாம் என அறிவுறுத்தினார்.

இருந்தும், சர்வீஸ் ரோடு, சுரங்க பாதை நீக்கத்தால், பொதுமக்கள் மோசமாக பாதிக்கப்படுவார்கள் என்பதால், 'கோயமுத்துார் கன்ஸ்யூமர் காஸ்' அமைப்பு பொது நல வழக்கு தொடர தீர்மானித்துள்ளது. அதற்காக, நெடுஞ்சாலை துறை அதிகாரிகளுக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

அதில், 'சுரங்க பாதை அமைப்பது கட்டாயம் என சாலை விதிகளில் கூறப்பட்டுள்ளது. கோவையில் மாதந்தோறும் 10 பேருக்கு குறையாமல் சாலை விபத்தில் உயிரிழக்கின்றனர். இரண்டரை ஆண்டுகளில் 238 பாதசாரிகள் பலியாகி உள்ளனர். பாதசாரிகள் பாதுகாப்பு மற்றும் உள்கட்டமைப்பு வசதியை அரசு அதிகாரிகள் எவ்வளவு அலட்சியமாக புறக்கணிக்கின்றனர் என்பதற்கு இதுவே சாட்சி'.

'சுரங்க பாதைகள் மற்றும் சர்வீஸ் ரோட்டை நீக்கியது, பொதுமக்கள் நலனுக்கு முற்றிலும் விரோதமானது. ஏற்கனவே திட்டமிட்ட ஐந்து இடங்களில் சுரங்க பாதை அல்லது நடை மேம்பாலம் லிப்ட் வசதியுடன் கட்ட வேண்டும். அங்கீகரிக்கப்பட்டவரைபடத்தின் அடிப்படையில், சர்வீஸ் ரோடு போட வேண்டும்' எனகூறப்பட்டுள்ளது.

அமைப்பின் செயலாளர் கதிர்மதியோன் கூறுகையில், ''கலெக்டரின் உத்தரவை நெடுஞ்சாலைதுறை அதிகாரிகள் மீறியுள்ளனர். இது, பொறுப்பற்ற அணுகுமுறை. காந்திபுரத்தில் மேம்பாலம் கட்டிய போதும் இப்படித்தான் நடந்து கொண்டனர். நெடுஞ்சாலை துறை அதிகாரிகளின் முடிவுகளால், பொதுமக்களே பாதிக்கப்படுகின்றனர், என்றார்.

# கரூர் மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்: சட்டமன்ற உறுப்பினர் நேரில் ஆய்வு

கரூர், ஜூலை 30

கரூர் சட்டமன்ற உறுப்பினர் செந்தில்பாலாஜி கரூர் மாநகராட்சி வார்டு எண் 11 மற்றும் 20 பகுதிகளுக்கு தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்களில் மாவட்ட கலெக்டர் மீ. தங்கவேல் தலைமையில் 20 பயனாளிகளுக்கு ரூ. 15.48 இலட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.



பின்னர் கரூர் சட்டமன்ற உறுப்பினர் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் 15.07.2025 அன்று தொடங்கி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, கரூர் மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் தொடங்கி நடைபெற்று வருகிறது. உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் கரூர் மாவட்டத்தில் 15.07.2025 முதல் வரும் செப்டம்பர் மாதம் வரை நகர்ப்புற பகுதிகளில் 78 முகாம்களும் மற்றும் ஊரகப் பகுதிகளில் 101 முகாம்களும் என மொத்தம் 179 சிறப்பு முகாம்கள் மூலம் பொது மக்களின் கோரிக்கைகளுக்கு தீர்வு காணப்படவுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள கடைக்கோடி மக்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள் அவர்கள் வசிக்கும் பகுதிகளுக்கு அருகாமையிலேயே சென்று வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தமிழ்நாடு முதலமைச்சர் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தில் பெறப்படும் மனுக்கள் அனைத்திற்கும் 45 நாட்களுக்குள் தீர்வு காண வேண்டுமென உத்தரவிட்டுள்ளார்கள்.

கரூர் மாவட்டத்தில் 25.07.2025 வரை நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் பல்வேறு துறைகளின் சார்பில் 13,894 கோரிக்கை மனுக்களும் மற்றும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை கோரிக்கை விண்ணப்பமாக 8,635 விண்ணப்பங்கள் என மொத்தம் 22,529 மனுக்கள் பெறப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக இன்று 30.07.2025 கரூர் மாநகராட்சி வார்டு எண் 11 மற்றும் 20 உட்பட்ட பகுதிகளுக்கு கரூர் வாசவி மஹாலில் முகாம் நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் இன்றைய தினம் பொதுமக்கள் வழங்கிய மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொண்டு கரூர் மாநகராட்சியின் சார்பாக 6 நபர்களுக்கு பிறப்புச் சான்று, இறப்புச் சான்று மற்றும் சொத்து வரி பெயர் மாற்றத்திற்கான ஆணைகளையும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பாக 8 பயனாளிகளுக்கு வகுப்புச் சான்று, வருமானச் சான்று மற்றும் பிறப்பிடச் சான்று உள்ளிட்ட சான்றிதழ்களையும், எரிசக்தி துறையின் சார்பாக 1 நபருக்கு மின் இணைப்பு பெயர் மாற்றத்திற்கான ஆணைகளையும், கரூர் நகர கூட்டுறவு வங்கியின் சார்பாக ரூ. 9.00 இலட்சம் மதிப்பீட்டில் மகளிர் சுய உதவிக்குழு கடனுதவியும், ரூ. 50,000 மதிப்பீட்டில் மாற்றுத்திறனாளி கடனுதவியும் மற்றும் ரூ. 4.98 இலட்சம் மதிப்பீட்டில் வீட்டு அடமானக் கடனுதவியும், தாட்கோ மூலம் 2 பயனாளிகளுக்கு ஆடு வளர்ப்பு மற்றும் கறவை மாடு வளர்ப்பு திட்டத்தின் கீழ் தலா ரூ. 50,000 மானியமாகவும் என மொத்தம் 20 பயனாளிகளுக்கு ரூ. 15.48 இலட்சம் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை கரூர் சட்டமன்ற உறுப்பினர் செந்தில்பாலாஜி வழங்கினார்.

# நிறைவு பெற்ற ஆசிரியர்களுக்கு பாராட்டு விழா

சேலம், ஜூலை 30

சேலம் கோட்டை பகுதியில் அமைந்துள்ள சூசன் அம்மாள் மஹாலில் தமிழக ஆசிரியர் கூட்டணி முப்பெரும் விழா நடைபெற்றது. இதில் பணி நிறைவு பெற்ற ஆசிரியர் பெருந்தகைகளுக்கு பாராட்டு விழா, நல்லாசிரியர் கனவு ஆசிரியர் விருது பெற்றவர்களுக்கு பாராட்டு விழா, சேலம் ஊரக வட்டார கிளையில் புதிய பொறுப்பாளர்கள் பதவிக்கு விழா ஆகிய முப்பெரும்




நிகழ்ச்சி நடைபெற்றது,

இவ்விழாவில் ஐபெட்டோ அகில இந்திய செயலாளர் வா. அண்ணாமலை கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியை அ.ராஜ்குமார் தலைமை தாங்கினார், மா.சீனிவாசன் வரவேற்புரை ஆற்றினர், லோ.மணிகண்டன் இயக்க உறுதிமொழியை வாசித்து ஏற்றுகொண்டனர். பணி நிறைவு பெற்ற இயக்க செம்மல்களுக்கு நல்லாசிரியர்களுக்கு புதிய பொறுப்பாளர்களுக்கு பொன்னாடை அணிவித்து நினைவு பரிசு வழங்கி வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியின் இறுதியாக கா. சுகந்தி நன்றியுரை ஆற்றினார்.

மேலும் பொறுப்பாளர்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டனர்

# எல் ஐ சி முகவர்களுக்கு நல வாரியம் அமைத்திட வேண்டும் என அரியலூரில் நடந்த லிகாய் 4வது கிளை மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றம்

அரியலூர், ஜூலை 30

அரியலூர் பைபாஸ் ரோடு ஏ ஒய் எம் மினி ஹாலில் கூட்டரங்கில், தமிழ்நாட்டில், எல் ஐ சி முகவர்களுக்கு, கேரளா அரசு அமைத்தது போல் முகவர்கள் நல வாரியம் அமைத்திட வேண்டும் என லிகாய் 4வது கிளை மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றம். மாநாட்டிற்கு, தஞ்சை கோட்ட செயற்குழு, அரியலூர் கிளை தலைவர் என் நீலமேகம் தலைமை வகித்தார். முகவர்கள் டி இரவி, என் ராஜேந்திரன், ஆர் கணபதி, ஆர் எஸ் வெங்கடகிருஷ்ணன், எஸ் ஜெயக்குமார், ஆர். ஜெயம், டி. அன்பழகன் எஸ்.ராஜா, எம் குமரேசன், எஸ் வெங்கடேசன், ஏ. பெரியசாமி, எஸ் சக்கரவர்த்தி, எம். தர்மலிங்கம், உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

லிகாய் சங்க மாவட்ட தலைவர் எம் பாலசுப்ரமணியன் மாநாட்டிற்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்றார். கோட்ட பிரதிநிதி எஸ் சவுரி ராஜ் மாநாட்டில் அஞ்சலி தீர்மானத்தை வாசித்தார். இணை செயலாளர் ஜெ செல்லமுத்து, இணை செயலாளர் எஸ் முருகேசன், கோட்ட



பொதுக்குழு டி ராஜா, டி .கண்ணன், எஸ் ஜெயலட்சுமி, செயற்குழு வி கலைச்செல்வி உள்ளிட்டோர் தீர்மானங்களை முன்மொழிந்தனர். தஞ்சை கோட்ட பொதுச் செயலாளர் எம். சங்கர் மாநாட்டிற்கு துவக்க வரையாற்றினார். தஞ்சை கோட்ட துணை பொதுச் செயலாளர் கே, கிருஷ்ணன் செயலாளர் அறிக்கை வாசித்தார். கிளைப் பொருளாளர் எஸ் செல்வராஜ் வரவு செலவு அறிக்கை வாசித்தார். தொடர்ந்து தஞ்சை கோட்ட தலைவராக விசி முனுசாமி தேர்வு செய்யப்பட்டார். மாநாட்டில், பாலிசிதாரர்களுக்கு போனஸை உயர்த்தி பாலிசி மீதான நீக்கவேண்டும் இம்மாநாட்டில் கேட்டுக்கொள்ளப்படுகிறது. கமிஷன் குறைப்பு நடவடிக்கையால் லட்சக்கணக்கான முகவர்களின் வாழ்வாதாரம், பாதிக்கப்படும் நிலை உருவாவதை தடுக்க கமிஷன் குறைப்பு நடவடிக்கையை கைவிட்டு பழைய கமிஷன் முறையையே கொண்டு இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது. முகவர்களுக்கு வழங்கப்படும் குழுக்காப்பீடு, முகவர்களின் முகவாண்மை காலம் வரை (வயது வரம்பின்றி) வழங்கவேண்டும். குழுக்காப்பீட்டு தொகையை ரூ. 50 லட்சமாக உயர்த்திட வேண்டும், முகவர்களுக்கு குறைந்தபட்ச மாத ஊதியம் ரூ.26,000/ வழங்கிட கோரியும் இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

கேரளாவைப்போல தமிழகத்திலும் முகவர்களுக்கு நலவாரியம் அமைத்திட வேண்டும் என தமிழக அரசை வலியுறுத்திட கோரியும் இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

அனைத்து முகவர்களுக்கும் வாகனம் வாங்க வட்டியில்லாமல் முன்பணம் வழங்கிட வேண்டும் என இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

அனைத்து முகவர்களுக்கும் மெடிக்கிளைம் பயன் கிடைத்தி போர்கால நடவடிக்கை எடுத்திட வேண்டுமாய் இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது. முகவர்களுக்கான பயணிக்குடை (கிராஜிவிட்டி) கணக்கிட்டு முறையை மாற்றி அமைத்து ரூ.10 லட்சமாக உயர்த்தி வழங்கிட இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது. பாலிசி மீதான கடனுக்கு விதிக்கும் வட்டியை குறைக்கவேண்டும்.

பொதுத்துறை நிறுவனங்களை தனியார் மாக்கும் ஒன்றிய அரசின் கொள்கை முடிவை கைவிட வேண்டும். பொதுத்துறை பொதுத்துறையாகவே செயல்படவேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. நிறைவாக ,லிகாய் மாநில செயல் தலைவர் ஆர் .அன்பு நடராஜன் மாநாட்டில் நிறைவுரையாற்றினார். முடிவில் செயற்குழு உறுப்பினர் பி. பாஸ்கர் நன்றி கூறினார்.

# வேப்பேரி பகுதியில் மருத்துவ கல்லூரி மாணவியிடம் செல்போன் பறித்த நபர் கைது: செல்போன் மீட்பு



சென்னை, ஜூலை 30

சென்னை, வேப்பேரி பகுதியில் உள்ள பெண்கள் விடுதியில் தங்கி மருத்துவ கல்லூரியில் முதலாம் ஆண்டு படித்து வரும் 18 வயது மாணவி 22.07.2025 அன்று மாலை,, வேப்பேரி, பூந்தமல்லி நெடுஞ்சாலை, எழும்பூர் மெட்ரோ ரயில்வே ஸ்டேஷன் அருகே நடந்து சென்றபோது, அப்பெண்ணை பின்தொடர்ந்து வந்த நபர் ஒருவர், அந்த பெண் வைத்திருந்த செல்போனை பறித்துக் கொண்டு தப்பியோடிவிட்டார். இது குறித்து பாதிக்கப்பட்ட பெண் 1 வேப்பேரி காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

1 வேப்பேரி காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்தும், சம்பவயிடத்தின் அருகில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி பதிவுகளை ஆய்வு செய்தும், அப்பெண்ணிடம் செல்போனை பறித்துக் கொண்டு தப்பிய நபர் இளையராஜா, வ/24, ரீமுஷ்ணம் தாலுக்கா, காட்டுமன்னார் கோயில், கடலூர் மாவட்டம் என்பவரை கண்டறிந்து கைது செய்தனர். அவரிடமிருந்து புகார்தாரரின் செல்போன் மீட்கப்பட்டது. கைது செய்யப்பட்ட எதிரி இளையராஜா விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

# நீலகிரி மாவட்டத்தில், நடைபெற்று வரும் உங்களுடன் ஸ்டாலின் முகாம் மற்றும் குன்னூர் சட்டமன்ற தொகுதியில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்ட பணிகள்

ஊட்டி, ஜூலை 30

நீலகிரி மாவட்டம், உதகை தமிழகம் அரசு விருந்தினர் மாளிகையில், மாவட்டத்தில் நடைபெற்று வரும் உங்களுடன் ஸ்டாலின் முகாம் மற்றும் குன்னூர் சட்டமன்ற தொகுதியில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்ட பணிகளின் முன்னேற்றம் தொடர்பான ஆய்வுக் கூட்டம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில், அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன், மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், சுய உதவிக்குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடனுதவிகள் குறித்தும்,



முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் சாலை பணிகள் குறித்தும், கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் வீடுகள் குறித்தும், கூட்டுறவுத்துறை சார்பில் வழங்கப்பட்டுள்ள பயிர்கடன் குறித்தும், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் குறித்தும், வேளாண் இயந்திர மயமாக்குதலுக்கான துணை இயக்க திட்டம் குறித்தும், தமிழ் புதல்வன் மற்றும் புதுமைப் பெண் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் குறித்து சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் கேட்டு, ஆய்வு மேற்கொண்டார். இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

குன்னூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில், கட்டப்பட்டு வரும் புதிய நகர்ப்புற துணை சுகாதார நிலையங்களை விரைவில் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதுபோல் பல்வேறு துறைகளின் சார்பில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்ட பணிகளை மழைகாலத்திற்கு முன்பாக முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், அரசால் வழங்கப்படும் நிதியினை சரியான முறையில் செலவு செய்திடும் வகையில் திட்டமிட்டு உரிய காலத்திற்குள் வளர்ச்சி திட்ட பணிகளை முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், பொதுமக்களின் அடிப்படை வசதிகளான சாலை உள்ளிட்ட பணிகளை விரைந்து முடித்திட துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

# பழவேற்காடு மீனவர்கள் கடலுக்கு செல்லத் தடை

பழவேற்காடு, ஜூலை 30

ஆந்திர மாநிலம், ஸ்ரீஹரிகோட்டா சதிஷ் தவான் ராக்கெட் ஏவுதளம், பழவேற்காடு கடல் பகுதிக்கு அருகில் அமைந்து உள்ளது. விண்ணில் ராக்கெட் ஏவப்படும் மற்றும் சோதனை பணிகள் மேற்கொள்ளும் காலங்களில், பாதுகாப்பு கருதியும். அசம்பாவிதங்களை தவிர்க்கும் பொருட்டும் பழவேற்காடு கடல் பகுதி



யில், குறிப்பிட்ட சுற்றளவிற்கு மீனவர்கள் மீன்பிடிக்க தடை விதிக்கப்படுவது வழக்கமாக உள்ளது.

அந்த வகையில், 30ஆம் தேதி ஜிஎஸ்எல்வி எப் 16 ராக்கெட் விண்ணில் செலுத்தப்பட உள்ளது. இதனால் பழவேற்காடு மீனவா்கள் கடலுக்கு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளதாக திருவள்ளூா் மாவட்ட மீன் வளம் மற்றும் மீனவ நலத்துறை தெரிவித்துள்ளது.

# 2025-26 முதல் காலாண்டில் தமிழ்நாடு அரசின் சொந்த வரி வருவாய் 14.5 சதவீதம் அதிகரிப்பு

சென்னை, ஜூலை 30

2025, 26 முதல் காலாண்டில் தமிழ்நாடு அரசின் சொந்த வரி வருவாய் 14.5 சதவீதம் அதிகரித்துள்ளது. நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் வரிவருவாய் 14.5 சதவீதம் அதிகரித்து ரூ.43,070 கோடியாக உயர்ந்துள்ளது. கடந்த நிதியாண்டின் இதே காலாண்டில் தமிழ்நாடு அரசின் சொந்த வரி வருவாய் ரூ.37,605 கோடியாக இருந்தது.

# சென்னை: டாஸ்மாக் கடையில் தகராறு.. ஹார்டுவேர் கடை ஊழியர் அடித்து கொலை

சென்னை, ஜூலை 30

சென்னை குரோம்பேட்டை ஆதம்நகரைசேர்ந்தவர் பரந்தாமன். இவர் வடபழனியில் உள்ள ஹார்டுவேர் கடையில் ஊழியராக பணிபுரிந்து வந்தார். இந்த நிலையில், டாஸ்மாக் கடைக்கு பரந்தாமன் மது அருந்த சென்றுள்ளார். அப்போது பரந்தாமனிடம் மது போதையில் இருந்த மூன்றுபேர்வீண்தகராறில் ஈடுபட்டு தாக்கியுள்ளனர்.

மூன்று பேரும் சேர்ந்த பரந்தாமனை சரமாரியாக தாக்கியதில் அவர் படுகாயம் அடைந்தார். இதை யடுத்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பரந்தாமன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இதுகுறித்து தகவலறிந்து வந்த போலீசார், விசாரணைமேற்கொண்டு மூன்று பேரையும் கைது செய்தனர்.

## கிராம பகுதிகளில் தொழில் செய்பவர்களுக்கு 'லைசென்ஸ்' கட்டாயம்: தமிழக அரசு உத்தரவு




சென்னை, ஜூலை 30

இது டீக்கடை முதல் அனைவருக்கும் பொருந்தும் என்றும் தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

தமிழக அரசு, தமிழ்நாடு கிராம பஞ்சாயத்து வணிகம் அல்லது தொழில் உரிமம் (லைசென்ஸ்) வழங்குவதற்கான விதிகள்2025 என்ற சட்டத்தை கடந்த சட்டசபை கூட்டத்தொடரில் கொண்டு வந்து நிறைவேற்றியது. அதற்கு கவர்னர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளித்ததால், அரசாணை வெளியிடப்பட்டு தற்போது சட்டமாக அமலுக்கு வந்துள்ளது.

இந்த சட்டத்தின்படி கிராம பஞ்சாயத்து பகுதிகளில் வணிகம் அல்லது தொழில் செய்பவர்கள் இனி அதற்குரிய கட்டணம் செலுத்தி கட்டாயம் உரிமம் (லைசென்ஸ்) பெற வேண்டும். இது டீக்கடை முதல் அனைவருக்கும் பொருந்தும் என்றும் தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இதில் பழைய பேப்பர்கள்இரும்பு பொருட்கள் விற்பனை, கொரியர் சேவைகள், அச்சகம், இறைச்சிமீன் கடைகள், தையல் தொழில், சலவை கடைகள், திருமண மண்டபங்கள் உள்ளிட்ட 119 சேவை தொழில்களும் பட்டியிலப்பட்டு உள்ளன. இந்த தொழில்களுக்கு கிராம பஞ்சாயத்துக்கு ஏற்ற வகையில் குறைந்தபட்சம் ரூ.500 முதல் ரூ.30 ஆயிரம் வரை லைசென்ஸ் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## பல பெண்களுடன் தொடர்பில் இருந்த போலீஸ் ஏட்டு.. மனைவி எடுத்த அதிரடி முடிவு



திண்டுக்கல் ஜூலை 30

திண்டுக்கல் சீலப்பாடி மகாலட்சுமிநகரைசேர்ந்த பார்த்திபன் (வயது 35) பழனி போலீஸ் நிலையத்தில் ஏட்டுவாக பணியாற்றி வருகிறார். இவரது மனைவி வினோதினி (20). இவர்களுக்கு கடந்த ஆண்டு திருமணம் நடந்துள்ளது. திருமணமான ஒரு வாரத்திற்குள்ளேயே பார்த்திபனின் நடவடிக்கை சரியில்லையாம். இதனால் வினோதினி, பார்த்திபனின் அன்றாட செயல்பாட்டை கண்காணித்து வந்தார்.

இதற்கிடையில் பார்த்திபனின் செல்போனை எடுத்து வினோதினி பார்த்துள்ளார். இதில் பார்த்திபன் அடிக்கடி வாட்ஸ்அப்பில் பல பெண்களிடம் பேசி இருந்ததையும், ஆபாச படங்கள் வைத்திருந்ததையும் கண்டுபிடித்தார். இது குறித்து பார்த்திபனின் குடும்பத்தினரிடம் வினோதினி கூறியுள்ளார். இதனால் குடும்பத்தினர்கள் இடையே தகராறு ஏற்பட்டுள்ளது. இந்த பிரச்சினை தொடர்பாக வினோதினியை பார்த்திபன் குடும்பத்தினர் அடித்து வீட்டை விட்டு விரட்டி விட்டுள்ளனர். இதுகுறித்து அவர் திண்டுக்கல் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டிடம் புகார் கொடுத்தார்.

அதன் பேரில் ஒட்டன்சத்திரம் அனைத்து மகளிர் போலீசார் பார்த்திபன், அவரது தாய் கண்ணம்மாள் உள்பட 10 பேர் மீது வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர். இதற்கிடையில் பார்த்திபன் கடந்த ஒரு வாரத்துக்கு முன்பு கன்னிவாடி போலீஸ் நிலையத்திற்குட்பட்ட பகுதியில் நடந்த அடிதடி வழக்கு ஒன்றில் சம்பந்தப்பட்டு முன் ஜாமீன் பெற்றிருந்தார். இதற்காக அவர் தினமும் கன்னிவாடி போலீஸ் நிலையத்தில் கையெழுத்திட்டுவந்தார். இந்தநிலையில்வினோதினிகொடுத்த புகாரின் அடிப்படையில் பார்த்திபனை ஒட்டன்சத்திரம் அனைத்து மகளிர் போலீஸ் இன்ஸ்பெக்டர் பேபி கைது செய்தனர்.

## பாலியல் தொல்லை கொடுத்த தாத்தாவை அடித்து உதைத்த சிறுமி

சிவகங்கை ஜூலை 30

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை அருகே உள்ள ஒரு கிராமத்தை சேர்ந்தவர் கட்டிட மேஸ்திரி. அவருக்கு வயது 74. இவருடைய மகன் வெளிநாட்டில் வேலை பார்த்து வருகிறார். கட்டிட மேஸ்திரி மற்றும் அவருடைய மருமகள்,

2 பேத்திகள் ஒரே வீட்டில் வசித்து வந்தனர். மருமகள் அப்பகுதியில் உள்ள பஞ்சாலைக்குவேலைக்கு சென்று வந்தார். 19 வயது பேத்தி கல்லூரியில் 2ம் ஆண்டு படித்து வருகிறார்.

11 வயது பேத்தி பள்ளிக்கு சென்று வருகிறார்.

இந்த நிலையில் மருமகள் அதிகாலையில் பஞ்சாலைக்கு வேலைக்கு சென்ற பிறகு, 19 வயது பேத்தியிடம் கட்டிட மேஸ்திரி பாலியல் சீண்டலில் ஈடுபட்டுள்ளார். 11 வயது சிறுமிக்கும் அவர் பாலியல் தொல்லை கொடுத்தார். இதனால் ஆத்திரம் அடைந்த அந்த சிறுமி, தாத்தாவை அடித்து உதைத்துள்ளார். பின்னர் வேலை முடிந்து வீடு திரும்பிய தாயிடம் 2 மகள்களும் தாத்தா தங்களுக்கு பாலியல் தொல்லை கொடுத்ததை கூறியுள்ளனர்.

அதிர்ச்சியடைந்த அவர் தேவகோட்டை அனைத்துமகளிர்போலீஸ் நிலையத்தில் புகார் செய்தார். போலீசார் போக்சோ சட்டத்தில் வழக்குப்பதிவு செய்து, 74 வயதான தாத்தாவை கைது செய்தனர். பின்னர் அவரை தேவகோட்டை கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

## என்னை மிரட்டி பணிய வைக்க தி.மு.க. அரசு முயன்றது கண்ணீர் மல்க பேசிய ராஜேந்திரபாலாஜி



விருதுநகர், ஜூலை 30

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வருகிற 8ந்தேதி, விருதுநகர் மாவட்டம் சிவகாசி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் மக்களை சந்திக்கிறார். இதற்கான ஏற்பாடுகள் தொடர்பாக சிவகாசி சட்டமன்ற தொகுதி நிர்வாகிகளின் ஆலோசனை கூட்டம் வேலாயுதம் ரோட்டில் உள்ள ஒரு மண்டபத்தில் நேற்று காலை நடைபெற்றது.

இதில் முன்னாள் அமைச்சர் கே.டி.ராஜேந்திரபாலாஜி பேசுகையில், "ஆட்சிக்கு வந்தவுடன் தி.மு.க. என் மீது பொய் வழக்கு போட்டது. என்னை மிரட்டி பணிய வைக்க பல நடவடிக்கைகளை எடுத்தது. ஆனால் நான் கட்சியை காட்டி கொடுக்கமாட்டேன் என்றேன். தனிச்சிறையில் என்னை சந்தித்த போலீஸ் அதிகாரிகள் என்னிடம் கட்சிக்கு எதிராக செயல்பட வற்புறுத்தினர்.

என் உயிர் இருக்கும் வரைநான்அ.தி.மு.க.வில் தான் இருப்பேன். எம்.ஜி.ஆர். ஆரம்பித்த கட்சிக்கு துரோகம் செய்ய மாட்டேன். (அப்போது அவர் கண்ணீர் சிந்தியபடி பேசினார்). சிவகாசி சட்டமன்ற தொகுதிதான் என்னை வளர்த்தது. அதனால் வருகிற சட்டமன்ற தேர்தலில் இந்த தொகுதியில்தான் போட்டியிடுவேன். யார் தடுத்தாலும் அவர்களின் எண்ணம் நிறைவேறாது.

ராஜபாளையம் தொகுதியில் என்னை சதி செய்து தோற்கடித்தனர். எந்த சாதிக்கும், மதத்துக்கும் நான் எதிரானவன் அல்ல. என்னை பற்றி சமூக வலைத்தளங்களில் வரும் உண்மைக்கு புறம்பான தகவல்களை யாரும் நம்ப வேண்டாம். அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் கொண்டு வரப்பட்ட திட்டங்களை தி.மு.க. அரசு சொந்தம் கொண்டாடுகிறது" என்று அவர் பேசினார்.

## தாய்ப்பால் கொடுத்த போது மூச்சுத்திணறி 8 மாத குழந்தை உயிரிழப்பு

மதுரை ஜூலை 30

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி ஆவடைத்தங்கம் நாடார் தெருவை சேர்ந்தவர் விநாயக். இவருடைய மனைவி கண்மணி. இவர்களுக்கு ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு ஆண் குழந்தை பிறந்தது. இந்த குழந்தை பிறந்த நாளன்றே இறந்து விட்டது. இந்நிலையில் சென்னையில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் 8 மாதங்களுக்கு முன்பு கண்மணிக்கு 2வதாக பெண் குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்த ஒரு மாதத்தில் உசிலம்பட்டிக்கு கொண்டு வந்தனர். இந்நிலையில் நேற்று குழந்தைக்கு கண்மணி தாய்ப்பால் கொடுத்த போது திடீரென மூச்சுத்திணறல் ஏற்பட்டு குழந்தை மயங்கியதாக கூறப்படுகிறது. இதனால் அதிர்ச்சி அடைந்த கண்மணி மற்றும் குடும்பத்தினர் உடனடியாக குழந்தையை உசிலம்பட்டி அரசு மருத்துவ மனைக்கு கொண்டு வந்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி குழந்தை பரிதாபமாக இறந்தது. இதுகுறித்து தகவல் அறிந்த உசிலம்பட்டி நகர் போலீசார் அங்கு சென்று குழந்தையின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். மேலும் குழந்தையின் இறப்புக்கான காரணம் குறித்து போலீசார் விசாரித்து வருகின்றனர். இச்சம்பவம் அந்த பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

## பா.ஜ.க.வின் பிரித்தாளும் சூழ்ச்சிக்கு ஓ. பன்னீர்செல்வம் பலிகடா ஆகி விட்டார் செல்வப்பெருந்தகை



சென்னை ஜூலை 30

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை சென்னை சத்திய மூர்த்தி பவனில் நேற்று செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

ராஜேந்திர சோழனுக்கு விழாஎடுத்து இருக்கிறோம் என பிரதமர் மோடி வடமாநிலத்தில் பேச வேண்டும். 10 ஆண்டுகளில் தமிழகத்திற்கு ரூ.3 லட்சம் கோடி கொடுத்து இருப்பதாக பிரதமர் மோடி கூறுகிறார். உள்துறை மந்திரி அமித்ஷா ரூ.6 லட்சத்து 80 ஆயிரம் கோடி என்று சொல்கிறார். மத்திய மந்திரி எல்.முருகன் ரூ.12 லட்சம் கோடி என்று சொல்கிறார். ஒவ்வொரு நபரும் கோடிக்கணக்கில் தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்துள்ளதாக மாற்றி மாற்றி பேசுகின்றனர்.

இதில் யார் சொல்வது உண்மை?.

தமிழகத்திற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக பிரதமர்மோடி உண்மைக்கு புறம்பாக கூறி வருகிறார். காங்கிரஸ் மத்தியில் ஆட்சியில் இருக்கும்போதுதான் அதிக நிதி தமிழகத்துக்கு கொடுத்தது. திருமாவளவன், எம்.பி. என்ற அடிப்படையில் பிரதமர் கலந்து கொண்ட நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். இதை திருப்புமுனை என அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி பேசுவது அறியாமை.

'இந்தியா' கூட்டணி தமிழகத்தில் வலிமையாக இருக்கிறது. ஒரு செங்கலை கூட உருவ முடியாது. முன்னாள் முதல்அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தர்மயுத்தம் செய்ததற்கு வழிகாட்டியது யார்? பின்னர் அ.தி.மு.க.வை 4 ஆக உடைத்தனர். இப்போது அவரை முழுமையாக கைவிட்டு விட்டனர். இதுதான் ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க.வின் சித்தாந்தம். அவர்களின் பிரித்தாளும் சூழ்ச்சிக்கு ஓ.பன்னீர்செல்வம் 'பலிகடா' ஆகிவிட்டார். அவரது அரசியல் வாழ்க்கையை முடித்துவிட்டார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

## அன்புமணி நடைபயணத்துக்கு தடை கோரி மீண்டும் மனு அளித்த ராமதாஸ்



சென்னை, ஜூலை 30

கல்வி, சமூகநீதி உள்பட 10 உரிமைகளை வலியுறுத்தி பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் உரிமை மீட்பு நடைபயணத்தை செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் தொகுதியில் கடந்த 25ம் தேதி தொடங்கினார். அவருடைய இந்த சுற்றுப்பயணத்துக்கு பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் எதிர்ப்பு தெரிவித்திருந்தார்.

கட்சியின் நிறுவனரான எனது அனுமதி இல்லாமல் பா.ம.க. கொடியை பயன்படுத்தி நடைபெறும் இந்த சுற்றுப்பயணத்தால் சட்டம்ஒழுங்கு பிரச்சினை ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே அன்புமணியின் இந்த பயணத்துக்கு தடை விதிக்க வேண்டும் என்று, டாக்டர்ராமதாஸ்தரப்பில் டி.ஜி.பி. அலுவலகத்தில் புகார்கடிதம் அளிக்கப்பட்டது. அதே வேளையில், திட்டமிடப்பட்டபடி டாக்டர் அன்புமணி ராமதாஸ் தனது பயணத்தை தொடங்கிய நிலையில், அவரது பயணத்துக்கு போலீஸ் டி.ஜி.பி. சங்கர் ஜிவால் தடை விதித்ததாக தகவல்கள் வெளியானது. இது தொடர்பான சுற்றறிக்கையும் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த நிலையில் டாக்டர் அன்புமணி ராமதாஸ் நடைபயணத்துக்கு தடை விதிக்கப்படவில்லை என்றும், சுற்றறிக்கை தவறாக புரிந்துக்கொள்ளப்பட்டுள்ளது என்றும் போலீஸ் டி.ஜி.பி. அலுவலகம் தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டது.

இதனிடையே பாமக வழக்கறிஞர் கே. பாலு, வடக்கு மண்டல ஐஜி அஸ்ரா கார்க்கை சந்தித்தார். அதன்பின் செய்தியாளர்களைச் சந்தித்த பாலு, "இந்த பயணத்திற்கு தடை என்ற தகவல் கிடைக்கப்பெற்றது. இதை அறிந்து பா.ம.க.வினர் வருத்தமும், அதிர்ச்சியும் அடைந்தனர். அதன் பிறகு டிஜிபி அலுவலகத்தில் இருந்து அனுப்பப்பட்ட சுற்றறிக்கை தவறாக புரிந்து கொள்ளப்பட்டு, தடை விதிக்கப்பட்டது என செய்தி வெளியானது. அது தொடர்பாக டிஜிபி அலுவலகத்தில் உள்ள உயர் அதிகாரிகள், சட்டம் ஒழுங்கு டிஜிபி மற்றும் வடக்கு மண்டல ஐஜி, தொடர்புடைய காவல் மாவட்ட கண்காணிப்பாளர்களிடம் பேசிய பின், தெளிவுபடுத்தினார்கள். இது தடை விதிப்பதற்கான சுற்றறிக்கை அல்ல என தெரிவித்தார்கள். இந்த சுற்றுப்பயணத்திற்கு காவல் துறை தடை என்பது தவறான செய்தி. தொடர்புடைய மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் உரிய உத்தரவை பிறப்பிப்பார்கள் என தெரிவித்துள்ளார். திட்டமிட்டபடி நடைபயணம் நடைபெறும்" என விளக்கம் அளித்திருந்தார் இதனைத் தொடர்ந்து தொடர்ச்சியாக திட்டமிட்டப்படி அன்புமணியின் நடைபயணம் நடந்துவருகிறது.

இந்நிலையில், தமிழக அரசின் உள்துறை செயலாளர் தீரஜ்குமாரை டாக்டர் ராமதாசின் உதவியாளர் சாமிநாதன் நேற்று சந்தித்தார். அவரிடம் டாக்டர் ராமதாஸ் எழுதிய கடிதத்தை வழங்கினார். அந்த கடிதத்தில், 'அன்புமணியின் நடைபயணத்தால் கட்சி நிர்வாகிகளுக்குள் குழப்பம் ஏற்பட்டு ஆங்காங்கே மோதல் ஏற்படுகிறது. இதனால் சட்டம்ஒழுங்கு பாதிக்கும் சூழலும் ஏற்பட்டு உள்ளது. எனவே அவருடைய நடைபயணத்துக்கு உடனடியாக தடை விதிக்க வேண்டும். ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள அனுமதியை ரத்து செய்ய வேண்டும்.' என்று கூறியுள்ளார். இதனால் அன்புமணியின் நடைபயணத்திற்கு மீண்டும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

## குரூப் 2 தேர்வு: கூடுதல் காலி பணியிடங்களுக்கான சான்று சரிபார்ப்பு கலந்தாய்வு தொடங்கியது

சென்னை, ஜூலை 30

டி.என்.பி.எஸ்.சி. குரூப் 2, குரூப் 2ஏ பணியில் காலியாக உள்ள 1,936 பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பை கடந்த ஜூன் மாதம் 20ம் தேதி வெளியிட்டது. இப்பதவிக்கான முதல்நிலை தேர்வு செப்டம்பர் 14ம் தேதி நடந்தது. இத்தேர்வை 5 லட்சத்து 81,305 பேர் எழுதினர்.

இத்தேர்வுக்கான ரிசல்ட் டிசம்பர் 12ம் தேதி வெளியிடப்பட்டது. இந்நிலையில் குரூப் 2ஏ பதவியில் பதவிக்கான மெயின் தேர்வு பிப்ரவரி 8ம் தேதி நடந்தது. இதில் 20,033 பேர் பங்கேற்றனர். தேர்வர்கள் முதன்மை எழுத்து தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் அத்தேர்வுக்கான அறிவிக்கையில் வெளியிடப்பட்ட பிற விதிகளின் அடிப்படையில் இருவழி தொடர்பு முறையில் மதிப்பெண் மற்றும் தரவரிசை பட்டியலை டி.என்.பி.எஸ்.சி. கடந்த மே 5ம் தேதி வெளியிட்டது.

இந்த சூழலில் அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள காலி பணியிடங்களை நிரப்புவதற்கான மூலச்சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு இன்று (திங்கட்கிழமை) தொடங்கியது. சென்னை பிராட்வேயில் உள்ள டி.என்.பி.எஸ்.சி. அலுவலகத்தில் சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு நடைபெற்றது. வரும் ஆகஸ்ட் 1ம் தேதி வரை இந்த இந்த சான்றிதழ் சரிபார்ப்பு, கலந்தாய்வு நடைபெறுகிறது.

முன்னதாக கடந்த ஆண்டு நடைபெற்ற குரூப் 2, 2ஏ தேர்தலில் கூடுதல் பணியிடங்கள் சேர்க்கப்பட்டன. இதன்படி நகராட்சி ஆணையர், உதவியாளர், சிறைத்துறை நன்னடத்தை அலுவலர் உள்ளிட்ட பணியிடங்கள் சேர்க்கப்பட்டது.

சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கு அழைக்கப்படும் தேர்வர்களுக்குஅதற்கானவிவரம் எஸ்.எம்.எஸ். மற்றும் இமெயிலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட நாள், நேரத்தில் கலந்து கொள்ள தவறினால் மறுவாய்ப்பு அளிக்கப்படாது என்றும் டி.என்.பி.எஸ்.சி. அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## சாதிய ஆணவப் படுகொலைகளுக்கு எதிராக தனிச்சட்டம் இயற்ற வேண்டும் சீமான் வலியுறுத்தல்



சென்னை ஜூலை 30

சாதிய ஆணவப்படுகொலை செய்யப்பட்ட கவின்குமார் மரணத்தில் தொடர்புடைய கொலையாளிகளுக்கு கடும் தண்டனை கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தூத்துக்குடி மாவட்டம், ஆறுமுகமங்கலம் பகுதியைச் சேர்ந்த மென்பொறியாளர் தம்பி கவின்குமார் பட்டப்பகலில் ஆணவப்படுகொலை செய்யப்பட்ட செய்தியறிந்து பெரும் அதிர்ச்சியும், ஆழ்ந்த மனத்துயரமும் அடைந்தேன். ஆற்ற முடியாத பேரிழப்பைச் சந்தித்து நிற்கும் தம்பியின் குடும்பத்தாருக்கும், உறவுகளுக்கும் எனது ஆறுதலைத் தெரிவித்து, துயரத்தில் பங்கெடுக்கிறேன்.

நவீனமும், அறிவியல் தொழில்நுட்பமும் உச்சபட்ச வளர்ச்சி பெற்றிருக்கும் தற்காலத்தில் நடந்தேறும் இத்தகைய ஆணவப் படுகொலைகள் நாகரீகச் சமூகத்தையே முற்றுமுழுதாகக் கேள்விக்குள்ளாக்குகின்றன.

தமிழினத்தின் ஓர்மையைச் சிதைக்கும் வகையில் நடைபெறும் சாதிய வன்முறை வெறியாட்டங்களும், கொடுங்கோல் செயல்பாடுகளும் ஒருநாளும் ஏற்புடையதல்ல. சக மனிதரின் உயிரைப் பறிக்கும் கொடுஞ்செயல்கள் மனிதத்தன்மை அற்றவை என்பதைத் தாண்டி, சாதியின் பெயரால் அவை நிகழ்த்தப்படுவதுகுட்டுமொத்த சமூகத்தையும் வெட்கித் தலைகுனியச் செய்கின்றன.

ஒரு ஆணும், பெண்ணும் மனமொத்து விரும்பி, வாழ்க்கையைத் தொடங்குவதற்கு எதிராக சாதியை நிறுத்துவதும், அந்த சாதிக்காகப் பச்சைப்படுகொலைகளை செய்வதும் மிருகத்தனத்தின் உச்சமாகும். சமத்துவத்திற்கும், சமூக அமைதிக்கும் எதிரான இத்தகைய சாதிய ஆணவப் படுகொலைகள் நம்மைக் கற்காலத்திற்கு இழுத்துச் செல்கின்றன. ஆகவே, சாதியின் பெயரால் நிகழ்த்தப்படும் வன்முறைகளும்,

ஆணவக்கொலைகளும்முற்றாகநிறுத்தப்பட ஆளும் ஆட்சியாளர்கள் கடும் நடவடிக்கைகளையும், முன்னேற்பாடுகளையும் செய்ய வேண்டியது பேரவசியமாகிறது. அந்தவகையில், சாதிய ஆணவக்கொலைகளுக்கு எதிராக தனிச்சட்டம் இயற்றவும், மனம்விரும்பி வாழ்க்கையைத் தொடங்கும் இணையர்களுக்கான பாதுகாப்பை உறுதிசெய்யவும் வேண்டியது ஆளும் அரசின் தார்மீகப் பொறுப்பும், கடமையுமாகும்.

ஆகவே, தம்பி கவின்குமார் ஆணவப் படுகொலையில் தொடர்புடைய கொலையாளி சுர்ஜித், அதற்குத் துணைபோன பெற்றோரையும் சிறைப்படுத்தி, அவர்களுக்குக் கடும்தண்டனைகிடைப்பதை உறுதிசெய்ய வேண்டுமெனவும், சாதிய ஆணவப் படுகொலைகளுக்கு எதிராக தனிச்சட்டம் இயற்றப்பட வேண்டுமெனவும் தி.மு.க அரசை நாம் தமிழர் கட்சி சார்பாக வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## பிளஸ்2 துணைத்தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் அரசு கல்லூரிகளில் சேர விண்ணப்பிக்கலாம்

சென்னை ஜூலை 30

பிளஸ்2 பொதுத்தேர்வில் தவறிய மாணவர்களின் உயர்கல்வி கனவை நனவாக்க துணைத்தேர்வில்தேர்ச்சி பெற்ற மாணாக்கர்கள் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இக்கல்வியாண்டே (2025 26) இளநிலை பட்டப்படிப்பில் சேர விண்ணப்பிக்கலாம் என உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து உயர்கல்வித்துறை அமைச்சர் தெரிவித்துள்ளதாவது:

ஏழை, எளிய மாணவர்கள் உயர்கல்வியினை பெற வேண்டும், அனைவருக்கும் சமமான உயர்கல்வி கிடைத்திட வேண்டும் என்பதற்காக, அரசு கல்லூரி

இல்லாத பகுதிகளில் நடப்பாண்டில் மட்டும் புதியதாக 15 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை தொடங்கிட தமிழ்நாடு முதலமைச்சரால் ஆணையிடப்பட்டு, அவ்விடங்களில் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன. மேலும், மாணவர்களின் தேவைக்கேற்ப 15,000க்கும் மேற்பட்ட மாணாக்கர் சேர்க்கை இடங்கள் பல்வேறு பாடப்பிரிவுகளில் உருவாக்கப்பட்டன. தமிழ்நாடு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 20252026ம் கல்வியாண்டிற்கான மாணாக்கர்கள் சேர்க்கைக்கான விண்ணப்பப்பதிவு 07.05.2025ல் தொடங்கி தற்போதுமுதலாமாண்டு வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன.

பிளஸ்2 பொதுத்தேர்வில் தவறிய மாணவர்கள் தாங்கள் உயர்கல்வி வாய்ப்பை தவறவிட்டோம் என்று சோர்வடைந்துவிடாமல் இருக்க அவர்கள் உயர்கல்வி வாய்ப்பினை பெற்றிட வேண்டும் என்ற அடிப்படையில் அவர்களுக்கு உடனடியாக துணைத்தேர்வு நடத்தப்பட்டு தற்போது தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. இதில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் இக்கல்வியாண்டே உயர்கல்வி பயில ஏதுவாக அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இளநிலை முதலாமாண்டு மாணாக்கர்கள் சேர்க்கைக்கான விண்ணப்பப் பதிவினை www.tngasa.in என்ற இணையதள முகவரியில் விண்ணப்பிப்பதற்கு உரிய வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

எனவே, மாணவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இணையதளத்தில் விண்ணப்பித்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு உயர்கல்வித்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தினகனி
Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253
30.7.2025

# சாத்தான்குளம் இரட்டைக்கொலை வழக்கு: நீதிபதியிடம் கோரிக்கை வைத்த ஜெயராஜின் மகள்கள்



மதுரை ஜூலை 30

தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தை சேர்ந்த வியாபாரி ஜெயராஜ், இவருடைய மகன் பென்னிக்ஸ் ஆகியோரை கடந்த 2020ம் ஆண்டில் விசாரணைக்கு அழைத்துச்சென்று போலீசார் கடுமையாக தாக்கினர். இதில் இருவரும் படுகாயம் அடைந்து அடுத்தடுத்து பரிதாபமாக இறந்தனர். இந்த இரட்டைக்கொலை குறித்து சி.பி.ஐ. வழக்குப்பதிவு செய்தது.

அப்போதைய சாத்தான்குளம் இன்ஸ்பெக்டர்ஸ்ரீதர், சப்இன்ஸ்பெக்டர்கள் ரகு கணேஷ், பாலகிருஷ்ணன் உள்பட 9 போலீசார் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இந்த வழக்கு மதுரை மாவட்ட முதலாவது கூடுதல் செசன்சு கோர்ட்டில் விசாரிக்கப்பட்டு வருகிறது. விரைவில் இவ்வழக்கில் தீர்ப்பு வழங்கப்படலாம் என எதிபார்க்கப்படுகிறது.

இந்தநிலையில்இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர், மதுரை கோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில், "இந்த வழக்கில் குற்றம் செய்தவர்களுக்கு தண்டனை கிடைக்க வேண்டும், அரசாங்கத்திற்கும், காவல்துறைக்கும் நேர்மையாகவும், உண்மையாகவும் இருக்க வேண்டும் என்ற காரணத்தினால் நான் அரசு தரப்பு சாட்சியாக (அப்ரூவராக) மாற விரும்புகிறேன்," என்று கூறியிருந்தார்.

இந்த மனு ஏற்கனவே விசாரணைக்கு வந்தபோது, ஸ்ரீதர் அப்ரூவராக மாறுவதாக கூறுவதை ஏற்கக்கூடாது என சி.பி.ஐ. தரப்பில் கடும் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது.

இந்தநிலையில் இந்த வழக்கு மதுரை மாவட்ட முதலாவது கூடுதல் செசன்சு கோர்ட்டில் நீதிபதி முத்துக்குமரன் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது ஸ்ரீதர் ஆஜரானார்.

இறந்த ஜெயராஜின் மகள்கள் பெர்சிஸ், பியூலா ஆகியோரும் நேரில் ஆஜரானார்கள். அவர்கள் நீதிபதியிடம், இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர்தான், எங்களின் தந்தை மற்றும் சகோதரர் கடுமையாக தாக்கப்பட்டு இறந்ததற்கு காரணம். அவரது தூண்டுதலின் பேரில் தான் போலீசார் எங்கள் தந்தையையும், சகோதரரையும்கடையில்இருந்து அழைத்துச்சென்று போலீஸ் நிலையத்தில் தாக்கினர்.

இது தொடர்பாக நாங்கள் ஏற்கனவே எங்கள் வக்கீல் மூலமாக விரிவாக மனு தாக்கல் செய்திருக்கிறோம். எனவே அப்ரூவராக மாறுவதாக கூறும் ஸ்ரீதரின் மனுவை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம். இந்த கோர்ட்டும் அதே முடிவை எடுத்து அவரது மனுவை நிராகரிக்கும் என நம்புகிறோம்" என்றனர்.

பின்னர் நீதிபதி, பொதுவாக ஒரு வழக்கு விசாரணை என்பது சாட்சியம் போதுமானதாக இல்லாத பட்சத்தில் குறிப்பிட்ட நபர்கள் அப்ரூவர் ஆவது ஏற்கப்படும்.

இந்த வழக்கின் விசாரணையில் எந்த இடத்தில் சி.பி.ஐ.யின் சாட்சியம் மிகவும் தொய்வாக இருக்கிறது என நீங்கள் நினைக்கிறீர்கள்? எதற்காக அப்ரூவராக மாற நினைக்கிறீர்கள்? என்பது உள்ளிட்ட விவரங்களை பிரமாண வாக்குமூலமாக இந்த கோர்ட்டில் இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர் வருகிற 31ந் தேதிக்குள் தாக்கல் செய்ய வேண்டும் என நீதிபதி தெரிவித்து, இந்த வழக்கு விசாரணையை வருகிற 31ந் தேதிக்கு ஒத்திவைத்தார்.

# கடன் வாங்கிய நண்பர் மரணம்: நிதி நிறுவனம் செய்த செயலால் என்.எல்.சி. ஊழியர் எடுத்த விபரீத முடிவு


கடலூர் ஜூலை 30

கடலூர் மாவட்டம் நெய்வேலியைச் சேர்ந்தவர் ஆரோக்கியதாஸ் (56 வயது). இவருடைய மனைவி லீமாரோஸ் (49 வயது). இந்த தம்பதிக்கு லீசா, ரீனா ஆகிய 2 மகள்கள் உள்ளனர். என்.எல்.சி. ஊழியரான ஆராக்கியதாஸ், 2வது சுரங்கத்தில் எலக்ட்ரீசியனாக பணிபுரிந்து வந்தார். இவருடைய நண்பர் தனியார் நிதி நிறுவனத்தில் கடன் வாங்கி இருந்தார். இதற்கு ஆரோக்கியதாஸ் ஜாமின் கையெழுத்து போட்டுள்ளார்.

இந்த நிலையில் ஆரோக்கியதாசின் நண்பர் உடல்நிலை சரியில்லாமல் உயிரிழந்துவிட்டார். இதனால் அவர் வாங்கிய கடன் தொகையின் மாத தவணையை ஆரோக்கியதாசின்வங்கிக்கணக்கில்இருந்துநிதிநிறுவனம் பிடித்தம் செய்ததாக கூறப்படுகிறது.

இதனால் மனமுடைந்த ஆரோக்கியதாஸ் வீட்டில் உள்ள அறையில் நேற்று காலை தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து லீமாரோஸ் கொடுத்த புகாரின்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பிளஸ்2 மாணவி தூக்குப்போட்டு தற்கொலை: காரணம் என்ன? போலீசார் விசாரணை



பொன்மலைப்பட்டி, ஜூலை 30

திருவெறும்பூர் அருகே உள்ள கிருஷ்ணசமுத்திரம் பகுதியை சேர்ந்தவர் மூக்கையன். இவர் காய்கறி வியாபாரி. இவரது மனைவி ராஜேஸ்வரி, இவர்களது 17 வயது மகள், பெல் நிறுவன வளாகத்தில் உள்ள பள்ளியில் பிளஸ்2 படித்து வந்தார். நேற்று முன்தினம் காலை மூக்கையனும், ராஜேஸ்வரியும் வேலைக்கு சென்று விட்டனர். மாணவியும் சீருடை அணிந்து பள்ளிக்கு செல்ல புறப்பட்டதாக தெரிகிறது.

ஆனால் அவர் செல்லாத நிலையில், வெகு நேரமாக கதவு திறக்கப்படாமல் இருந்துள்ளது. இதைக்கண்டு சந்தேகமடைந்த அக்கம் பக்கத்தினர் வீட்டின் பூட்டை உடைத்து உள்ளே சென்று பார்த்துள்ளனர். அப்போது வீட்டில் மின்விசிறியில் மாணவி தூக்குப்போட்டு தொங்கியதை பார்த்து அதிர்ச்சி அடைந்தனர். உடனடியாக அவரை மீட்டு துவாக்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றனர்.

அங்கு மாணவியை பரிசோதனை செய்த டாக்டர்கள், ஏற்கனவே அவர் இறந்து விட்டதாக தெரிவித்தனர். இது குறித்து மாணவியின் தந்தை மூக்கையன் அளித்த புகாரின்பேரில்திருவெறும்பூர்போலீசார்வழக்குப்பதிவு செய்து, மாணவி தற்கொலை செய்து கொண்டதற்கான காரணம் என்ன? என்பது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்தசம்பவம் அந்த பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் (30.7.2025)

**மேஷம்**: புதிய தொடர்புகள் உருவாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். பணியில் பாராட்டுகள் கிடைக்கும்.

**ரிஷபம்**: அதிக உணர்ச்சிப்பூர்வமான நாள். உடல்நலத்தைக் கவனிக்கவும். தவறான முடிவுகள் தவிர்க்க வேண்டியது அவசியம்.

**மிதுனம்**: தினம் சாதகமாக இருக்கும். புதிய வாய்ப்புகள் வந்து சேரும். வெளியூர் பயணம் சாத்தியம்.

**கடகம்**: நட்பு வட்டத்தில் சிக்கல்கள் ஏற்படக்கூடும். செலவுகள் அதிகரிக்கலாம். பொறுமையாக செயல்படுங்கள்.

**சிம்மம்**: பழைய கடன்கள் அடைப்பு வாய்ப்பு. தாமதம் ஆன வேலைகள் நிறைவேறும். குடும்பத்தில் சந்தோஷம். அதிர்ஷ்ட எண்: 1

**கன்னி**: வேலை தொடர்பான முக்கிய முடிவுகள் எடுக்கும் நாள். மற்றவர்களை நம்பி தவறு செய்ய வேண்டாம்.

**துலாம்**: உத்தியோகத்தில் முன்னேற்றம். உள்சஞ்சாரம் அதிகம் இருக்கும். சகோதரர் உதவியால் நன்மை ஏற்படும்.

**விருச்சிகம்**: திடீர் செலவுகள் வரக்கூடும். தொழில் அல்லது வியாபாரத்தில் கவனம் தேவை. தாமதமாக செயல்பட வேண்டாம்.

**தனுசு**: விழாக்கள், நிகழ்வுகளில் பங்கேற்பீர்கள். குடும்ப உறவுகளில் மகிழ்ச்சி அதிகரிக்கும். செல்வாக்கு உயரும்.

**மகரம்**: அதிக உழைப்பால் வெற்றி. சிந்தித்து செயல்படுவது அவசியம். அன்பான வார்த்தைகள் பெரிய விஷயங்களை சாதிக்கச் செய்யும்.

**கும்பம்**: நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். மனநிலை சமநிலையாக இருக்கும். புதிய ஆர்வங்கள் பிறக்கும்.

**மீனம்**: புதிய திட்டங்கள் தொடங்கலாம். குடும்பத்தில் மகிழ்ச்சி மேலோங்கும். வருமானம் மேம்படும்.

# தூத்துக்குடியில் 3 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் கப்பல் கட்டுமான தளம்: மத்திய அரசு திட்டம்

சென்னை, ஜூலை 30

பிரதமர் மோடி விரிவாக்கம் செய்யப்பட்ட தூத்துக்குடி விமான நிலையத்தை கடந்த 3 தினங்களுக்கு முன்பு திறந்து வைத்தார். அதன் மூலம் இனி தூத்துக்குடியில் பெரிய ரக விமானம் வந்து செல்லும். அதோடு கூடுதல் பயணிகளை அங்கு கையாள முடியும். இந்த நிலையில் தற்போது தூத்துக்குடி துறைமுகத்தை மேம்படுத்தும் ஒரு மெகா திட்டத்தை மத்திய அரசு அறிவித்துள்ளது. தமிழ்நாடு, ஆந்திர பிரதேசம், ஒடிசா, குஜராத், மராட்டியம் ஆகிய 5 மாநிலங்களில் உள்ள துறைமுகங்களில் 15 ஆயிரம் ஏக்கரில் ரூ.1 லட்சத்து 50 ஆயிரம் கோடி மதிப்பீட்டில் கப்பல் கட்டுமான தொகுப்புகள் செயல்படுத்தப்பட உள்ளன. அதில்தமிழகத்தில்தூத்துக்குடிதுறைமுகம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டத்திற்காக தூத்துக்குடி துறைமுகம் அருகே 1,800 ஏக்கர் இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. விரைவில் கூடுதலாக 1,200 ஏக்கர் இடம் அதில் இணைக்கப்படும். மொத்தம் 3 ஆயிரம் ஏக்கரில் இந்த கப்பல் கட்டுமான தளம் அமைக்கப்படும். இது குறித்து அதிகாரி ஒருவர் கூறியதாவது: தூத்துக்குடியை முக்கிய கப்பல் கட்டும் மையமாக உருவாக்கஅரசுநடவடிக்கைகள்மேற்கொண்டு வருகிறது. மேலும் தூத்துக்குடி பசுமை எரிபொருள் தொழில்துறைக்கான முக்கிய மையமாகவும் உருவாக்கப்படுகிறது. இங்கு உருவாக்கப்படும் கப்பல்கள், பசுமை ஹைட்ரஜன் உள்ளிட்ட பசுமை எரிபொருள்கள் பயன்படும் வகையில் தயாரிக்கப்படும். இது தூத்துக்குடியின் மற்றொரு மணி மகுடமாக இருக்கும். ஏற்கனவே, 5 பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி திட்டங்கள் (40லட்சம்டன்ஆண்டுக்கு)தூத்துக்குடியில் ஒப்புதல் பெற்றுள்ளன. இதற்காக மட்டும் ரூ.2லட்சம்கோடிமுதலீடுகள்திட்டமிடப்பட்டுள்ளன. தூத்துக்குடியில் உருவாகும் பசுமை ஹைட்ரஜன் தொகுப்பு உலகளவில் பாராட்டைப் பெற்றுள்ளது. உலக பொருளாதார மன்றம் இதனை "பசுமை ஹைட்ரஜன் தொகுப்பு" என அடையாளம் காட்டியுள்ளது. இங்கு ஹைட்ரஜன் மற்றும் பசுமை அமோனியா போக்குவரத்துக்கான பைப்லைன் வழித்தடமும் உருவாக்கப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

# சூரியின் "மாமன்" ஓ.டி.டி ரிலீஸ் அறிவிப்பு




தமிழ் சினிமாவில் ஆரம்பத்தில் காமெடி கதாபாத்திரங்களில் மட்டுமே நடித்து தற்போது கதாநாயகனாக உயர்ந்துள்ளவர் நடிகர் சூரி. இவரது நடிப்பில் கடந்த மே 16ந் தேதி 'மாமன்' படம் வெளியானது. இதனை விலங்கு வெப் தொடரை இயக்கி புகழ்பெற்ற பிரசாந்த் பாண்டிராஜ் இயக்கியுள்ளார். லார்க் ஸ்டுடியோஸ் தயாரித்துள்ள இப்படத்தில் சூரிக்கு ஜோடியாக ஐஸ்வர்யா லட்சுமி நடித்துள்ளார். மேலும் சுவாசிகா, ராஜ்கிரண், பால சரவணன், பாபா பாஸ்கர் என மிகப்பெரிய நட்சத்திர பட்டாளமே நடித்துள்ளது. தாய் மாமனுக்கும், மருமகனுக்கும் இடையிலான உறவை குடும்பங்கள் கொண்டாடும் விதமாக உணர்வுபூர்வமாக காட்டியுள்ளனர். இப்படம் இதுவரைக்கும் ரூ. 48 கோடிக்கும் அதிகமாக வசூல் செய்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், 'மாமன்' படத்தின் ஓ.டி.டி ரிலீஸ் குறித்த தகவல் கிடைத்துள்ளது. 'மாமன்' படம் ஆகஸ்ட் 8 ம் தேதி ஜீ5 ஓ.டி.டி தளத்தில் வெளியாக உள்ளது.

தனது நுட்பமான நடிப்பிற்காக பெரும் பாராட்டுகளைப் பெற்ற நடிகர் சூரி " உண்மையான வெற்றி என்பது, உறவுகள் மற்றும் உணர்ச்சிகளை நேர்மையாகப் பாராட்டுவதில் உள்ளது, மேலும் 'மாமன்' திரைப்படம் அந்த அடித்தளத்தில் கட்டமைக்கப்பட்டது. இந்தப் படம் உண்மையில் நடந்த சம்பவங்களின் உணர்ச்சிப்பூர்வமான பயணம், மேலும் இது எத்தனை பேரின் மனங்களைத் தொட்டுள்ளது என்பதைப் பார்க்க மகிழ்ச்சியாக இருக்கிறது. இந்த உணர்வுகளை ஒரு துடிப்பான படமாகத் திறமையாக உருவாக்கிய இயக்குநர் பிரசாந்திற்கு எனது மனமார்ந்த நன்றி. 'மாமன்' ஜீ5 தளத்தில் ஸ்ட்ரீமாவதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன், இதனால் அதிகமான குடும்பங்கள் இந்தக் கதையைப் பார்த்து அனுபவிக்கவும், தங்கள் சொந்த பிணைப்புகளைப் போற்றவும் முடியும்." என்றார்.

# 3 பிஎச்கே படத்தின் கனவெல்லாம் வீடியோ பாடல் வெளியீடு




தமிழ் சினிமாவின் முன்னணி நடிகராக வலம் வரும் சித்தார்த், 'மிஸ் யூ' படத்தை தொடர்ந்து '3 பிஎச்கே' என்ற படத்தில் நடித்துள்ளார். இது சித்தார்த்தின் 40வது படமாகும். இந்த படத்தை '8 தோட்டாக்கள், குருதி ஆட்டம்' போன்ற படங்களை இயக்கிய ஸ்ரீ கணேஷ் இயக்கி உள்ளார்.

சாந்தி டாக்கீஸ் நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்தில் சித்தார்த்துடன் மீதா ரகுநாத், சைத்ரா, சரத்குமார் மற்றும் தேவயானி ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருக்கின்றனர். மிடில் கிளாஸ் குடும்பத்தில் இருப்பவர்கள் தங்களுக்கென சொந்தமாக ஒரு 3 பிஎச்கே வீடு வாங்க ஆசைப்படும் கதையாக இப்படம் உருவாக்கப்பட்டுள்ளது. திரையரங்குகளில் வெளியான இப்படம் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

இந்த நிலையில், இப்படத்தின் வசூல் குறித்த விவரம் வெளியாகி உள்ளது. இப்படம் 25 நாட்களில் ரூ. 14 கோடிக்கும் அதிகமாக வசூல் செய்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், '3 பிஎச்கே' திரைப்படத்தின் 'கனவெல்லாம்' வீடியோ பாடலை படக்குழு வெளியிட்டுள்ளது.

# அருண் விஜய்யின் "ரெட்ட தல" படத்தின் ஆடியோ உரிமையை பெற்ற பிரபல நிறுவனம்

1995ல் வெளியான 'முறை மாப்பிள்ளை' படத்தின் மூலம் தமிழ் திரையுலகில் கதாநாயகனாக அறிமுகமானவர் அருண் விஜய். கவுதம் மேனன் இயக்கிய 'என்னை அறிந்தால்' படத்தில் அஜித்துக்கு வில்லனாக ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றார். இவரது நடிப்பில் வெளியான வணங்கான் திரைப்படம் நல்ல வரவேற்பை பெற்றது.

இதனை தொடர்ந்து இவர், கிரிஷ் திருக்குமரன் இயக்கத்தில் 'ரெட்ட தல' என்ற படத்தில் நடித்து முடித்துள்ளார். இந்த படத்தில் அருண் விஜய் இரட்டை வேடங்களில் நடிக்கிறார். ஏற்கனவே இவர் தடம் திரைப்படத்தில் இரட்டை வேடங்களில்நடித்திருந்தார்என்பதுகுறிப்பிடத்தக்கது. இப்படத்தில்தான்யாரவிச்சந்திரன், சித்தி இத்னானி உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். பிடிஜி யுனிவர்சல் நிறுவனம் தயாரிக்க சாம்.சி.எஸ் இப்படத்திற்கு இசையமைக்கிறார். இப்படத்தில் சித்தி இத்னானி, தன்யா, பிக்பாஸ் பாலாஜி முருகதாஸ் ஆகியோர் பிரதான கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். நடிகர் அருண் விஜய், இப்படத்தில் இரட்டை வேடத்தில் 4 தோற்றங்களில் நடித்துள்ளதாகவும் இப்படம் அடுத்தடுத்த திருப்பங்களுடன் உருவாகியுள்ளதாகக் கூறியிருந்தார். ஏற்கனவே இந்த படத்தின் படப்பிடிப்பு பணிகள் முழுவதும் நிறைவடைந்தது.

'ரெட்ட தல' படத்தில் தனுஷ் ஒரு பாடல் பாடியுள்ளார். தனுஷ் இயக்கி நடித்து இருக்கும் 'இட்லி கடை' திரைப்படத்தில் வில்லன் கதாப்பாத்திரத்தில் அருண் விஜய் நடித்து இருப்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது இப்படத்தின் ஆடியோ உரிமையை பிரபல நிறுவனம் டி சீரிஸ் பெற்றுள்ளது. இதற்கிடையில் இப்படத்தின் டீசர் விரைவில் வெளியாக உள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது.

# இந்திய பயிற்சியாளர் குழுவில் அதிரடி மாற்றம்...பி.சி.சி.ஐ. முடிவு?



இந்திய கிரிக்கெட் அணி தற்போது இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் நடைபெற்ற முதல் 4 போட்டிகளின் முடிவில் இங்கிலாந்து தொடரில் 21 (4வது போட்டி டிரா) என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 5வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி லண்டன் ஓவல் மைதானத்தில் வருகிற 31ந் தேதி தொடங்குகிறது.

முன்னதாக ராகுல் டிராவிட்டுக்குப்பின் இந்திய அணியின் தலைமை பயிற்சியாளராக கவுதம் கம்பீர் பொறுப்பேற்றார். பொறுப்பேற்றதும் கம்பீருக்கு சில அதிகாரங்கள் வழங்கப்பட்டன. அதில் அவருக்கு தேவையான உதவி பயிற்சியாளர்களை அவரே தேர்வு செய்து கொள்ள பி.சி.சி.ஐ. அனுமதி வழங்கியது குறிப்பிடத்தக்கது.அதன்படி,அவர்பந்துவீச்சுபயிற்சியாளராகமோர்னேமோர்கலையும்,உதவிபயிற்சியாளராக ரியான் டென் டோஸ்கேட்டையும் தன்னுடன் சேர்த்துக்கொண்டார்.

கம்பீர் தலைமையில் இந்திய அணி டி20 மற்றும் ஒருநாள் போட்டிகளில் சிறப்பாக விளையாடி வருகிறது. ஆனால் டெஸ்ட் கிரிக்கெட்டில் தடுமாறி வருகிறது. குறிப்பாக ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து டெஸ்ட் தொடர்களில் இந்திய அணி அடுத்தடுத்து தோல்வியை தழுவியது. தற்போது நடைபெற்று வரும் இங்கிலாந்து தொடரிலும் இந்திய அணி தடுமாறி வருகிறது.

தன் காரணமாக கம்பீர் தலைமையிலான பயிற்சியாளர் குழு பெரிய அளவில் விமர்சனத்தை சந்தித்துள்ளது. இந்திய அணியின் பந்துவீச்சு துறையிலும் பெரிய அளவில் முன்னேற்றம் ஏற்படவில்லை.

இந்நிலையில் எதிர்வரும் ஆசிய கோப்பை தொடர் நிறைவடைந்தவுடன் இந்திய அணியின் பயிற்சியாளர் குழுவில் அதிரடி மாற்றங்களை பி.சி.சி.ஐ. செய்ய உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. அதன்படி, பந்துவீச்சு பயிற்சியாளர் மோர்னே மோர்கல் மற்றும் உதவி பயிற்சியாளர் ரியான் டென் டோஸ்கேட் ஆகியோரை நீக்க பி.சி.சி.ஐ. முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. ஆனால் தலைமை பயிற்சியாளராக கம்பீரே தொடர உள்ளதாகவும் கூறப்படுகிறது.

# டெஸ்ட் கிரிக்கெட்: கேப்டனாக அறிமுகம் ஆன முதல் தொடரிலேயே மாபெரும் சாதனை படைத்த கில்



இந்தியாஇங்கிலாந்து அணிகள் இடையிலான 4வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி மான்செஸ்டரில் உள்ள ஓல்டு டிராப்போர்டில் கடந்த 23ந் தேதி தொடங்கியது. இதில் முதலில் ஆடிய இந்திய அணி முதல் இன்னிங்சில் 358 ரன்னில் ஆல்அவுட் ஆனது. பின்னர் முதல் இன்னிங்சை ஆடிய இங்கிலாந்து அணி 669 ரன்கள் குவித்தது. ஜோ ரூட் (150 ரன்), கேப்டன் பென் ஸ்டோக்ஸ் (141 ரன்) சதம் அடித்தனர்.

311 ரன் பின்தங்கிய நிலையில் 2வது இன்னிங்சை தொடங்கிய இந்திய அணி 143 ஓவர்களில் 4 விக்கெட்டுக்கு 425 ரன்கள் எடுத்து 114 ரன்கள் முன்னிலை பெற்றிருந்தபோது ஆட்டம் டிராவில் முடித்து கொள்ளப்பட்டது. வாஷிங்டன் சுந்தர் 101 ரன்களுடனும், ரவீந்திர ஜடேஜா 107 ரன்களுடனும் களத்தில்இருந்தனர்.சுப்மன்கில்103ரன்களில்ஆட்டமிழந்தார். இங்கிலாந்து தரப்பில் கிறிஸ் வோக்ஸ் 2 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

இந்த தொடரில் இந்திய டெஸ்ட் அணியின் கேப்டனாக அறிமுகம் ஆன சுப்மன் கில் இதுவரை 4 சதம் உள்பட 722 ரன்கள் குவித்துள்ளார். இதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் கேப்டனாக அறிமுகம் ஆன முதல் தொடரிலேயே அதிக ரன் குவித்த 2வது வீரர் என்ற மாபெரும்சாதனையைபடைத்துள்ளார். இந்தசாதனையில் 810 ரன்களுடன் டான் பிராட்மேன் முதலிடத்தில் உள்ளார்.

அந்த பட்டியல்: 1. டான் பிராட்மேன் 810 ரன்கள் 2. சுப்மன் கில் 722 ரன்கள்★ 3. கிரெக் சேப்பல் 702 ரன்கள் 4. கிளைவ் லாயிட் 636 ரன்கள் 5. பீட்டர் மே 582 ரன்கள்

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.